அதிகாரி ஐ.ஜி. அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். ஆகவே இது பற்றி ஒத்தி வைப்புப் பிரேரணை தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கி இருக்கிறார்கள். ஆகவே இதற்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுகின்றேன். மேலும் பேரவை விதி 50 (viii)-ன் படி, இது அரசின் அன்றாட அலுவலுக்கு உட்பட்டது என்பதால், இத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பேரவையின் அலுவல் ஏற்கனவே அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளபடி, நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 156 (3)-க்கு இணங்க 1 முதல் 25-A வரை எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்களை 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் நாள், புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள்ளும் இதர மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்களை 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் நாள் சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள்ளும் சட்டப்பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று அறிவிக்கின்றேன்.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் இச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) 1971-72-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தைத் துவக்கக்கூடிய பேறு எனக்குக் கிடைத் திருப்பதற்கு ஸ்தாபன காங்கிரசுக்கு நான் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். அதன்மேலே என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைப்பதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

1971-72 ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வரவேற்கத்தக்க சில அம்சங்கள் இருந்தாலும் வெறுக்கக்கூடிய சில அம்சங்களும் இதில் அமைந்திருக்கின்றன என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பஸ்களைப் பொறுத்தமட்டில் உச்சவரம்பு வேண்டுமென்று சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் உடனேயே செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதைச் செய்வதற்கு மூன்றாண்டுக்காலம் ஆகும் என்று ஓரிடத்தில் பேசியதைக் கேட்டு கவலைப்பட்டேன். ஆயினும் இவ்வளவு துரிதமாக அதைக் கொண்டு வந்திருப்பதற்கு நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (ஆரவாரம்)

நிலச்சீர்த்திருத்த சட்டம் கொண்டுவந்தபோது எப்படி 15 ஏக்கர் என்று உச்சவரம்பு வைத்தாலும் 5 பேர்களுக்கு மேல் உள்ள பொதுக் குடும்பத்தில் நபருக்கு 2 ஏக்கர் என்பதாக—நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு அப்புறம் செய்ததை போல இல்லாது— பஸ்களிலே 10 என்று குறித்தாலும் நடைமுறையில் சிக்கலில்லாத வகையில் அதை குடும்பத்திற்கு ஏற்றாற்போல அமைக்க தக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்து பஸ்கள் வைத்துக்கொள்ள தனித்தனியாகப் பார்த்தாலும் உரிமை தரவேண்டும். அதிகமான பஸ்களை வைத்திருப்பவர்களிடம் இருந்து பஸ்களை எடுத்து தேசியமாக்கக்கூடாது என்று சொல்ல வில்லை ஆயினும் தேசியமக்கப்பட்ட பஸ் துறையில் இன்றைக்குப் பல விதமான நஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. போக்கு வரத்துத் துறை அமைச்சருக்கு அது தெரியும். மேலும் பல பஸ்களைத் தேசியமாக்கி நஷ்டத்தை அதிகப்படுத்திக்கொள்வதில் பயன் இல்லை. அதிகமான பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்